பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 04 2025 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. மும்பையில் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய தகவூர் ராணா அமெரிக்காவிலிருந்து இந்தியா கொண்டு வரப்படுவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.
2. நிதி சேவைகள் துறை, நிதி தொழில்நுட்பம், மின்னணு பொருளாதாரத்தில் தொடர்ந்து ஒத்துழைப்பது என இந்தியாவும் - இங்கிலாந்தும் உறுதிபூண்டுள்ளன.
3. உலக ஹோமியோபதி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
4. இதர நாடுகளுக்கு அமெரிக்கா விதித்த பரஸ்பர வரி 90 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்படுவதாக அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்துள்ளார்.
5. உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் ஆரியா போர்ஸ் - **Rudrankksh** இணை வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

மத்திய அரசு மேற்கொண்ட முயற்சி காரணமாக மும்பையில் 2008-ஆண்டு நடைபெற்ற தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய தகவூர் ராணா- அமெரிக்காவிலிருந்து இந்தியா கொண்டு வரப்படுவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில், இது மத்திய அரசுக்கு கிடைத்த வெற்றி என்றும், தகவூர் ராணா இந்திய நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவார் என்று கூறினார்.

முன்னதாக நாடு கடத்துவதற்கு எதிராக தகவூர் ராணா தாக்கல் செய்த மனுவை அமெரிக்க உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதையடுத்து சிறப்பு விமானம் மூலம் தகவூர் ராணா இன்று இந்தியா அழைத்து வரப்படுவார் என எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இந்தியாவும் - இங்கிலாந்தும் நிதி சேவைகள் துறை, நிதி தொழில்நுட்பம், மின்னணு பொருளாதாரத்தில் தொடர்ந்து ஒத்துழைப்பது என இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளன.

லண்டனில் நடைபெற்ற பொருளாதார மற்றும் நிதி சார்ந்த உரையாடலில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையிலான இந்திய குழுவினர், இங்கிலாந்து நிதி அமைச்சர் **Rachel reeves** தலைமையிலான குழுவினருடன் விவாதித்தனர்.

இரு நாடுகளும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், முதலீட்டு ஒப்பந்தம் ஆகியவற்றின் மூலம் பயன்பெறும் வகையில் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் செயல்படுவது என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

வர்த்தகம் மற்றும் சர்வதேச சவால்களை இணைந்து எதிர்கொள்வது எனவும் இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

**[]<<<>>>[]**

ஹிந்தி, சமஸ்கிருதம் உள்ளிட்ட இந்திய மொழிகளை கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டி வரும் உஸ்பெக்கிஸ்தான் அறிஞர்களை மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா பாராட்டியுள்ளார்.

டாஸ்கண்டில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி பள்ளியில் ஆசிரியர்கள், மாணவர்களிடையே அவர் உரையாற்றினார்.

உஸ்பெக்கிஸ்தானில் உள்ள அறிஞர்கள் தங்களது கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் மூலம் இந்தியா – உஸ்பெக்கிஸ்தான் இடையேயான வரலாற்று சிறப்புமிக்க உறவை வலுப்படுத்தி உள்ளதாகக் கூறினார்.

அப்பள்ளியில் 600-க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஹிந்தி மொழியை கற்றுக் கொள்வதாகவும், இந்திய மொழிகள் மற்றும் கலாச்சாரத்திற்காக அவர்கள் பாராட்டப்படுவதகாவும் திரு ஓம் பிர்லா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

உலக ஹோமியோபதி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ஹோமியோபதியின் தந்தை என்று அழைக்கப்படும் டாக்டர் சாம்வேல் ஹானிமேனின் பிறந்த தினத்தையொட்டி இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி ஆயூஷ் அமைச்சகம் சார்பில் நாடு முழுவதும் ஹோமியோபதி மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குஜராத் மாநிலம் காந்திநகரில் நடைபெறவுள்ள ஹோமியோபதி தொடர்பான கருத்தரங்கில் விவாதங்கள், ஆராய்ச்சி தொடர்பான விளக்கங்கள், ஹோமியோபதி தொழில்துறை கண்காட்சி இடம்பெறுகிறது.

நாட்டில் ஹோமியோபதி மருத்துவத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அதற்கான தேசிய ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மூன்று லட்சத்து 45 ஆயிரம் ஹோமியோபதி மருத்துவர்களும், 277 ஹோமியோபதி மருத்துவமனைகளும் உள்ளன.

அத்துடன் எட்டாயிரத்து 593 ஹோமியோபதி மருந்தகங்களும், 277 ஹோமியோபதி கல்வி நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன.

[]<<<>>>[]

மகாராஷ்டிரா அரசு முன்மொழிந்துள்ள சிறப்புக் பொதுபாதுகாப்புச் சட்டம் உள்நாட்டு பாதுகாப்புக்கு அவசியமான ஒன்று என அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் பத்திரிகையாளர் சங்க பிரதிநிதிகளுடன் பேசிய அவர், பத்திரிகையாளர்கள் மற்றும் மக்களுக்கு இதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும், கருத்து சுதந்திரம் பறிக்கப்பட மாட்டாது என்றும் கூறினார்.

இச்சட்டம் எந்த ஒரு தனி நபரையும் நோக்கமாகக் கொண்டு செயல்படாது என்றும், நாட்டின் நலனுக்கு எதிராக செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் அமையும் என்றும் திரு தேவேந்திர பட்னவிஸ் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மகாவீர் ஜெயந்தி இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா உள்ளிட்டோர் ஜெயின் சமூகத்தினருக்கு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

இதர நாடுகளுக்கு அமெரிக்கா விதித்த பரஸ்பர வரி 90 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்படுவதாக அந்நாடடு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்துள்ளார்.

ஆனால் இது சீனாவுக்கு பொருந்தாது என்று கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பரஸ்பர வரி விதிப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டாலும், பத்து சதவீத வரி விதிப்பு தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

சீனா மீது அதிகரிக்கப்பட்ட 125 சதவீத வரி விதிப்பு உடனடியாக அமலுக்கு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவுடனான வர்த்தக ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் வகையில் 75 நாடுகளுக்கான பரஸ்பர வரி விதிப்பை நிறுத்தி வைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் சீனா விதித்துள்ள 84 சதவீத வரி விதிப்பு நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ளது.

உலகளாவிய வர்த்தக முறையை அமெரிக்கா சீர்குலைத்துள்ளதாகவும் சீனா குற்றம்சாட்டியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில பொருட்களுக்கு வரி விதிப்பதற்கு ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஆதரவு அளித்துள்ளன.

ஐரோப்பிய யூனியன் நாடுகளின் இரும்பு மற்றும் அலுமினிய பொருட்களுக்கு அமெரிக்கா இறக்குமதி வரி விதித்துள்ளதை அடுத்து, அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கவும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன.

[]<<<>>>[]

அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பர வரி விதிப்பின் தாக்கங்கள் குறித்து இந்தியா கவனத்துடன் உற்றுநோக்கி வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது,

இது குறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால்,

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் மற்றும் இரு நாடுகளும் பயன்பெறும் வகையில் இந்தியாவும் – அமெரிக்காவும் பணியாற்றி வருவதாக அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

அருணாச்சல பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, சிக்கிம் மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீகார். கேரளா ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளிலும் கன மழை பெய்யக்கூடும் என்று அது கூறியுள்ளது.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம் மற்றும் குஜராத்தில் இன்று வெப்ப அலை வீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வடமேற்குப் பகுதியில் அடுத்த மூன்று நாட்களுக்கு வெப்பநிலை இரண்டு முதல் நான்கு டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே தமிழகத்தில் கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி. தேனி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சூறாவளிக் காற்று காரணமாக தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார்வளைகுடா, குமரிக்கடல் பகுதிகள், மத்திய மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் இன்று செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் ஆரியா போர்ஸ் - **Rudrankksh** இணை வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளது.

அர்ஜெண்டினாவின் **Buneos aires** -யில் நடைபெற்று வரும் இப்போட்டியின் பத்து மீட்டர் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதிச் சுற்றில் இந்த இணை 9-17 என்ற புள்ளி கணக்கில் சீன இணையிடம் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கத்தை வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை நான்கு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்ம் வென்று பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடம் வகிக்கிறது. சீனா முதலிடத்தில் உள்ளது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

அமெரிக்காவின் **Auburndale** மநகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் கலப்புக்குழுப் பிரிவில் அபிஷேக் வர்மா, ரிஷுப் யாதவ், ஓஜாஸ் டியோட்டல் ஆகியோரைக் கொண்ட இந்திய அணி 230-223 என்ற புள்ளி கணக்கில் டென்மார்க் அணியை வென்றது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் அணி 58 ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

அகமதாபாத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஒவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 217 ரன் எடுத்தது.

218 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் 19 புள்ளி இரண்டு ஒவரில் 159 ரன்னுக்கு ஆட்டமிழந்து தோல்வியடைந்தது.

பெங்களுருவில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களுரு அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து, பிரியான்ஷு ரஜாவத் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

சீனாவின் நிங்போ நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் பி வி சிந்து 21-15, 21-19 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Ester nurumi tri wardoyo**-வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் பிரியான்ஷு ரஜாவத் 20-22, 21-12, 21-10 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **kantaphon wang charoen**-ஐ வென்றார்.